என்பதுபற்றி விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்னதுபோல இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அரசு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதனால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள் கிராமங்களில் கட்டாயமாக கட்டுப்பாடு விதை நெல்லை கொள்முதல் செய்வதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள்

"தஞ்சை மாவட்டத்தில், லெவி கொள்முதல் செய்து முடித்த பிறகு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் அதிகாரிகள் சில கிராமங்களில் வீடுகள்தோறும் சென்று கட்டாயமாக கட்டுப்பாடு விதை நெல்களை கொள்முதல் செய்வதால் ஏற்பட்டிருக்கும் நிலை குறித்து"

விவாதிக்க ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார். அரசு தரப்பில் இது மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கும் அனுமதிதர மறுக்கிறேன்.

(உ) அம்பாசமுத்திரம் காவல் நிலையத்தில் முப்படாதி என்பவர் இறந்தது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ச. சங்குமுத்து தேவர் அவர்கள்,

"அம்பாசமுத்திரம் தொகுதி, அயன்சிங்கம்பட்டியில் வசித்து வந்த இ. முப்படாதி என்பவர் கோதையாறு மின்வாரியத்தில் வேலை பார்த்து வந்தார். 20—4—1975-ஆம் தேதி மாலை அம்பாசமுத்திரம் உதவி போலீஸ் இன்ஸ்பெக்டர், மற்றும் போலீஸ் அதிகாரிகள் அம்பை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்துள்ளார்கள். 21-ந் தேதி காலை முப்படாதி என்பவர் இறந்துவிட்டதைக் குறித்து விவாதிக்க"

என்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற காரணத்தினால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.